உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௫. } பிரமாதீச ௵ ஆவணி ௴ { பகுதி ௫.

## கல்லினுள் மனிதன்.

கல்லினுள் தேரை வாழ்தல் அசம்பாவிதமென்று "ஞானபோதினி" சஞ்சிகை ஒன்றில் வெளிவந்ததை மறுத்து "செந்தமிழ்" முதல் தொகுதியில் யாழ்ப்பாணம் ஸ்ரீ அ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் எழுதியதைப்படித்த அநேகர்க்கு "**கல்லினுள் மனிதன்**" என்ற இவ்விஷயம் வியப்பை விளைக்காமற் போகாது:

"ஹாங்காங்" என்ற தீவு இப்போது நம்மையாளும் ஆங்கிலேயர்க்குச் சொந்தமானது. இது சீனாவுக்கு அருகிள் உள்ளது. இத்தீவில் சில வாரங்கட்கு முன் ஓர் இடத்தில் உருண்டை வடிவான கருங்கற்பாறைக் குவியலினின்றும் திடீரென இருந்தாற்போலிருந்து மனிதன் குரல் ஒன்று கேட்கவே, அருகில் புல் அறுத்துக்கொண்டிருந்தவர்கள் திப்பிரமை கொண்டு மனங் கலங்கி நாலுபக்கங்களிலும் பார்த்துப் பிறகு இச்சப்தம் மனித சப்தமே எனத் தெளிந்து அவ்விடத்தினின்றும் விரைந்தோடிப் பக்கத்தில் இருந்த "பே வ்யூ" (Bay View) போலீஸ் ஸ்டேஷன் அதிகாரிகளிடம் இவ்வதிசய சம்பவத்தை அறிவித்தனர். அறிவித்ததும், தக்ஷணமே ஐரோப்பிய போலீஸ் உத்தியோகஸ்தர்கள் குறித்த இடம்போய்ச் சேர்ந்தனர். இயற்கைக்கு விரோதமான எவ்விஷயங்களையும் எளிதில் நம்புவது **அவர்கள்** சுபாவமில்லையாதலால் அவ் ஐரோப்பியர்கள் அதிநுட்பமாய் அவ்விடத்தைச் சோதித்தனர். சோதிக்கும்போதே

அவர்கள் காதிலும் மனித சப்தம் விழுந்தது. சத்தம் புறப்பட்ட இடத்தை நன்கு பலமுறை கவனித்து அவர்கள் அப்பாறையண்டைபோய் அங்கு தாம் கண்ட ஓர் வெடிப்பின் மூலமாக அதற்குள்ளிருந்த மனிதனின் கரசரணாதி அவயவங்களைக் கண்டனர். அவன் ஒருச்சாய்த்துப் படுத்துக்கொண்டு இருந்ததையும் அவ்விடத்தினின்றும் அவன் எழுந்து வரககூடாமல் இருந்ததையும் நன்கு உணர்ந்தார்கள். சுற்றிலும் பாறையால் நன்கு மூடப்பட்டு, குடுக்கைக்குள் இருப்பவன் போன்று அவன் கிடந்தான் என்பது நுட்ப சோதனையால் அறிய வந்ததாகும். ஆயினும் அவன் அதற்குள் நுழைந்து கிடக்க வேறு வழியுளதா என்று நாலுபக்கங்களிலும் அவர்கள் நன்காய்ந்தும் ஏதும் இருந்ததாகத் தெரிய வரவில்லை. பாறை அதிகமாக வெடித்திருந்த பாகம் 6 அங்குல அகலம்கூட இல்லை. அடைபட்டவன் சீனுவில் வடபாகத்தில் உள்ளவனும். அவனுக்கு வயது சுமார் 35 இருக்கும். அதிகப்பெருமனுமில்லை. மிக இளைத்தவனுமில்லை. நடுத்தர தேகக் கட்டுடையவன். அவன் பாஷை எவர்க்கும் விளங்கவில்லை. வெகு நாழிகை கழித்து அப்பாஷை அறிந்தவன் ஒருவன் வந்து அவன் அவ்வாறு சிறையுற்றிருக்கக் காரணம் என்னவென்று அவனைக் கேட்க, அவன் "ஓர் யக்ஷணி என்னை இங்கு கொண்டு வந்து வைத்திருக்கிறது" என்றான். இப்பதிலைத் தவிர வேறேதும் அவன் சொல்லவில்லை. இது தெய்வ சங்கற்பத்தால் நிகழ்ந்ததெனமனந்தேறி அவன் எவ்விதமான பயமும் மனக்கலக்கமும் எய்தாதவன் போலவே தோன்றினான். அவனை விடுவிக்க பப்ளிக் வொர்க்ஸ் எஞ்சினீர்களாலும் முடியவில்லை. அவன் எவ்வளவு காலமாக அங்கு இருக்கிறான் என்பதும் பெரியஉருவுடன் அச்சிறிய வாயிலாக எவ்வாறு உட்சென்றான் என்பதும் எவர்க்கும் விடுகதையாகவே இருக்கின்றது. அவனே வாய்திறந்து வலியச் சொன்னால் தான் உண்மை விளங்கும் போலும். அவனுக்குப் பசிப்பிணி இல்லை: வந்தவர்கள் கொடுத்த ரொட்டி முதலியவற்றை அவன் ஏற்றுக்கொள்ளாமல் தன்னை "யக்ஷணி நன்கு போஷித்து வருகிறது" என்று சொல்லுகிறான். அவன் தலைக்கு நேரே சதா ஜலம் சமீபத்தில் உள்ள ஓர் ஊற்றினின்றும்பொசிந்துகொண் டிருப்பதால் நீர் வேட்கையின் நிமித்தம் அவன் வருந்த நிமித்தமில்லை. திருட்டுத்தனமாக யாரேனும் ஆகாராதிகள் கொண்டு வந்து கொடுக்கிறார்களோ என்று போலீஸார் துப்புவைத்து விசாரித்தும் அவ்வாறு செய்ததாகத் தெரியவில்லை. இச்சமாசாரம் காட்டுத்தீயினும் அதி

தீவிரமாகப் பரவவே நாநா இடங்களினின்றும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து இவ்வேடிக்கையைக் கண்டு அதிசயித்தனர். தாம் படித்த அதி விசித்திரக் கதைகளினும் அதிவிசித்திரமாகவே இவ்வுண்மை சம்பவம் இருப்பதாக ஐரோப்பியர்கள் ஒப்புக்கொண்டனர். இம்மனிதனின் நிலை அதி அபாயகரமானதென்றும் அவனைச் சாகாமல் விடுவிப்பது அசாத்தியமானதென்றும் துரைத்தனத்தாரே அங்கீகரித்த விஷயங்களாகும். ஆயினும் கரி அள்ளிப் போடுவோரும் போலீசார்களும் அப்பாறையை வெகு சிரமப்பட்டுக் கல்லுளி கட்டப்பாரை யாதிய கொண்டு ஒருசிறிதே தகர்க்க முடிந்தது. பாறையின் வன்மைக்குஇவர்கள்வலிமை எம்மாத்திரம்? இவர்கள் அலுத்துக் கை ஓயவே பீரங்கிப்பட்டாளம் முழுமூச்சாக வேலைசெய்து களைத்துத் தம் இருப்பிடம் சேர்ந்தது. பிறகு சீனுவிலிருந்து பிரசித்திப்பெற்ற கல் உடைப்போர்களை வரவழைத்து வேலை செய்யச் சொல்லினர். ஆயினும் அவர்கள் அம்மனிதனுக்குப் பிராணபாயம் நேரிடும் ஆதலால் தங்களுக்கு வேலைச்செய்யச் சம்மதமில்லை யென்று சொல்லிவிட்டார்கள். இவர்கள் சொன்ன முகாந்தரம் உண்மையானதன்று. யக்ஷிணி வேண்டுமென்றே அவனை அங்கு கொண்டு வைத்திருந்ததால் அதற்கு விரோதமாக வேலைசெய்யின் தங்களை அது என்னபாடு படுத்துமோ என்ற பீதிதான் உண்மைக் காரணமாகும். பிறகு வேலை நின்றுவிட்டது. போலீசார் பாறையைச் சுற்றிப் பாரா இருந்தனர். மறுநாள் வெல்மிங்டன் என்ற அமெரிக்கப் புகைக்கப்பலினின்றும் இறங்கிய கப்பலோட்டிகள் ஐவர் இவ்வதிசயத்தைக் காணவும், கூடுமானால் உதவிசெய்யவும் விரும்பி, அங்குசென்று பாறையை நன்கு பரிசோதித்துக் கல்லின் நீக்குப் போக்கையும் அது நெக்கு விடக்கூடிய இடங்களையும் நன்கு கவனித்தனர். பிறகு அவர்களில் ஒருவன் சம்மட்டி ஒன்றை எடுத்துக் குறிப்பிட்ட ஓரிடத்திலும் அதன் போக்குகள்தோறும் அடித்துக்கொண்டே செல்ல ஏனைநால்வரும் அவன் அடித்த இடங்களில்தாமும் பன்முறை அடித்தனர். அடிக்கவே காரியம் எளிதில் முடிந்தது. பாறைபிளந்து கொடுக்க உள்ளே நெருக்குண்டு கிடந்த மனிதன் சிறிது புரண்டு கொடுத்தான், பிறகு ஐவரும் அவனைத்தூக்கி வண்டியிலேற்றித் துரைத்தனத்தார் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றனர். நல்ல வேளையாய் அவனுக்குப் பிரமாத படுகாயம் ஏதுமில்லை. ஆயினும் ஐயோ பாவம்! அச்சமும் திகிலும் அவனைச் சித்த ஸ்வாதீனமில்லாமற் செய்துவிட்டன. இப்பொழுது அவன் பைத்திய சாலையில் சிகிச்சைக்குள்ளாகி வருகிறான்! என்ன ஆச்சரியம்!

பத்திராதிபர்.

# ஆபு பென் ஆதமும் அமரதூதனும்.

[தன் உயிரைப்போல் மன்னுயிரை நேசிப்போரே பகவத் பக்தியிற் சிறந்தவர் என்ற அரிய நீதியைப் போதிக்கும் இவ்விஷயம் "*Leigh Hunt*" என்ற ஆங்கிலப் புலவர் இயற்றிய "Abou Ben Adem & The Angel" என்பதன் தமிழ்மொழி பெயர்ப்பு.]

ஆபு பென் ஆதம்—அவன் குலம் ஓங்குக!—
நீடிய சுகத்துயில் நின்றும் ஓர் இரா
விழித்தெழுந் தனன் அவன். : விண்ணவன் ஒருவன்
நன்கலர் அல்லி நாண் மலர் என்னச்
சந்திரி கையினைச் சுந்தர மாக்கி,
அந்நில வினில், தன் அறையினில், ஓர்பொன்
ஏட்டினில் ஏதோ எழுதக் கண்டனன்.
அப்போ திருந்த அதிபே ரமைதி பென்
ஆதமைத் தைரியம் அடையச் செய்தது.
அறையினில் தன்முன் அங்கு நின்றோனை
"எழுதவ தென்னை?" எனக்கேட் டனன் அவன்.
தான்குனித் திருந்த தலையினை நிமிர்த்தி
ஆர்வ மிக்க பார்வையி னோடும்
"ஈசனிடத்தே நேசமுள் ளோர்களின்
நாமந் தான்" என நவின்றதவ் வுருவம்.
"என்னதும் ஒன்றோ?" என்றனன் ஆபு.
"இலை ; இலை" என விடை ஈந்தனன் தேவன்.
தன் குரல் தாழ்த்தியும் தளரா மனத் துடன்
ஆபு கூறினன் ; "அங்ஙன மாயின்,
'ஒத்த சிருஷ்டியில் உற்ற அன்புடையான்'
என எனை வரைந்திட இறைஞ் சுகிறேன்" என.
வரைந்தனன் வானவன். மறைந்தனன். மறுநாள்
இரவினில், அவனை எழுப்புபே ரொளியுடன்
அந்தத் தேவனே அவன் முன் தோன்றி
இறைநே சப்பேறு எய்தியோர் பெயர்களை
எடுத்துக் காட்டினன், என்னே! முதன்மை
யாக நின்றது பென் ஆதமின் பெயரே.!

ம. கோபாலகிருஷ்ணையர்.

# கமலினி

(கஉ௩-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் I, களம் 4.

---

இடம்: ஷை அரண்மனையிலோரறை: காலம்: காலை.

(மங்கையர்க்கரசியும் கமலினியு முட்கார்ந்திருக்கிறார்கள்.)

**கமலினி:**—அம்மணி! சமீபத்தில் வருகிற கார்த்திகைக்குத் திருப்பரங்குன்றத்திற்குப் போய்ச் சுவாமி தெரிசனஞ் செய்து வர வேண்டு மென்று அதிக ஆவலாயிருக்கிறது. போய் வரட்டுமா?

**மங்கையர்க்கரசி:**—நீ யெப்படித் தனியே போய் வர முடியும்? இதற்கு முன் நீ யவ்விடத்திற்குப் போயிருப்பது மில்லை. அவ்விடத்தி லொருவரையு முனக்குத் தெரியவுந் தெரியாது. நீ யெப்படிப் போய் வருவது?

**கமலினி:**—நான் தனியாகப் போய்வர முடியுமா? என்... இறந்த நாள் முதல் என் வீட்டிலேயேயிருந்து என்னைத் தாய்... வளர்த்து வந்த கோமதியம்மாளை எனக்குத் துணையாக வருமப... கேட்டேன். அவளும் வருகிறதாகச் சம்மதிக்கிறாள். ஆகையால் ... ளையுமழைத்துக்கொண்டு போய்க் கோயிலிலேயே யிருந்து ... தெரிசனஞ் செய்து விட்டு வருகிறேன்.

**மங்கையர்க்கரசி:**—கார்த்திகை விசேஷம் கழிந்தவுடன் வந்து விடுவாயல்லவா?

**கமலினி:**—சௌகரியப்பட்டால் திருப்பரங்குன்றத்திற் சில நாளிருந்து விட்டு மதுரைக்கும் போய்விட்டு வரலாமென் றெண்ணுகிறேன்.

**மங்கையர்க்கரசி:**—வீரகேசரியிடத்திலு மாலோசித்துக்கொள்வோம். யாரடா அங்கே?

(சேவகன் வந்து தெண்டனிட்டு நிற்கிறான்.)

**மங்கையர்க்கரசி:**—வீரகேசரியை யழைத்துவா.

**சேவகன்:**—உத்தரவு. (போகின்றான்.)

வீரகேசரி:—(வந்து) ஏனம்மா அழைத்தீர்கள்?

மங்கையர்க்கரசி:—கமலினி திருப்பரங்குன்றம், மதுரை முதலிய ஸ்தலங்களுக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்துவிட்டு வரவேண்டுமென்று சொல்லுகிறாள்.

வீரகேசரி:—கமலினி! என்ன திடீரென்று ஸ்தல யாத்திரை செய்வதாகத் தீர்மானித்து விட்டாய்?

கமலினி:—கார்த்திகை சமீபத்தில் வருவதாலும் திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை வெகு சிறப்பா யிருக்குமென்று கேள்வியாதலாலும் அங்கே போகவேண்டுமென்ற விருப்பமேற்பட்டது. அவ்வளவு தூரம் போன மட்டிலும் மதுரைக்கும் போய்வரலா மென்றெண்ணுகிறேன்.

வீரகேசரி:—இருக்கட்டும். உனக்குத் துணையாக அனுப்புவதற் கிப்பொழுது ஒருவருமில்லையே. சரியான பெண் துணைவேண்டுமே? யாரை யனுப்புவதம்மா?

மங்கையர்க்கரசி:—அதைப்பற்றி யவள் முன்னமே ஏற்பாடு செய்துகொண்டாள். அவள் வீட்டிலிருந்த கோமதி அவளுடன் போவதற்குச் சம்மதித்திருக்கிறாளாம்.

வீரகேசரி:—அவள் சரியான துணைதான். கமலினி! கட்டாயமாகப் போகவேண்டுமென்று விருப்பமிருந்தால் போய்வா. சுவாமி தெரிசனத்திற்குப் போகவேண்டுமென்று சொல்லும்போது தடை செய்யக்கூடாது. ஆகையால் ஜாக்கிரதையாகப் போய்க் கூடிய சீக்கிரத்தில் திரும்பி வந்துவிடு. கமலினி! உன்னைச் சகோதரியாகப்பாவித்திருக்கிற என்னை விட்டு நெடுநாட்டிரிந்திராதே.

கமலினி:—என்னாலு மப்படிப் பிரிந்திருக்க முடியாதே. கூடிய சீக்கிரத்தில் வந்து விடுகிறேன்.

வீரகேசரி:—அப்படியானால் போய்வா. (கொஞ்சதூரம் போய்விட்டுத் திரும்பி வந்து) மதுரைக்குப் போனால் சக்ரவர்த்திக்கு உடம்பு எப்படி யிருக்கிறதென்று விசாரித்துக் கொண்டுவா.

கமலினி:—நேரிற் போய்ப் பார்த்தே வருகிறேன்.

வீரகேசரி:—அவ்வளவு சாமர்த்திய முண்டா உனக்கு சரி. சௌகரியமாய்ப் போய் வா.

கமலினி:—போய்வருகிறேன். (வீரகேசரி போகிறார்) கோமதியம்மாளைத் தயாரா யிருக்கும்படி சொல்லிவிட்டு வருகிறேன்.

மங்கையர்க்கரசி:—சரியப்படியே செய். (கமலினி போகிறாள்) நான்கொண்டிருந்த எண்ணத்திற்குச் சரியாகவேநேரிட்டது. கொஞ்சக் காலமாகவே கமலினி வீரகேசரியினிடத்தில் வேறுவிதமான எண்ணங் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவனைக் காணும் போது நாணுகின்றாள், அவனிடத்திற் பேசும்போது கீழே குனிந்து கொண்டு பேசுகிறாள். ஆனால் வீரகேசரி இன்று மவளைத்தன் சகோதரியாகப் பாவிப்பதுமன்றி அவள் கொண்டிருக்கிற எண்ணத்தையு மறியவில்லை யென்றே தோன்றுகின்றது. அவ னவ்வெண்ணத்தை யறிந்தாலொருவேளை யவனுக்கும் கமலினியின்பேரில்காதலேற்பட்டாலு மேற்படும். அப்படி யேற்பட்டாலு மதிலெனக்கதிக ஆக்ஷேபணை யொன்றுமில்லை. கமலினி யென்ன அழகிற்குறைந்தவளா? படிப்பிற் குறைந்தவளா? ஒன்றுமில்லை. அவ்விரண்டிற்கும் மேலவளுடைய குணங்கள். என்ன அமைதி! என்ன தெய்வபக்தி. எல்லாம் யோசிக்குமிடத்து அவளொரு அரசனதுபத்தினியாவதற் கேற்றவளே யல்லது குறைந்தவளல்லள். அப்படி யிருந்து மவள் நமதரண்மனை வயித்தியருடைய பெண்தானே யென்பதை யுத்தேசித்து என்மனம் கொஞ்சம் பின் வாங்குகின்றது. அரசன் எல்லா வருணப் பெண்களையும் விவாகஞ் செய்து கொள்ளலா மென் றேற்பட்டிருந்தாலும் நமதுகுடிகளுக்கும் நம்மைப்போ லொத்த மற்றைய அரசர்களுக்கு மஃதொரு இழிவாகத் தோன்றுமே யென்று மாத்திரம் யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. அதை யுத்தேசித்து வீரகேசரியுங் கமலினியும் கொஞ்சக் காலத்திற்குப் பிரிந்திருந்தால் நலமென் றெண்ணிக் கொண்டிருந்தேன். ஆனாலெப்படி யவர்களைப் பிரிப்பதென்று மாத்திரந் தோன்றாமலிருந்தது. கமலினியே திருப்பரங்குன்றத்திற்குப் போக வேண்டுமென்று விரும்பினது நான் கொண்டிருக்கிற எண்ணத்திற்குச் சரியான வழியாகவே இருக்கின்றது. அவளப்படிக் கொஞ்ச காலம் பிரிந்து போய் வந்தாலாவது அவளெண்ணம் மாறாதா? இல்லாவிட்டால் விதிப்படி நடக்கின்றது.

"யாவரே விதியினை வெல்லு நீர்மையார்" என்றபடி அவர்களிருவர்களுக்கும் விதியினால் விவாக மேற்பட்டிருந்தாலதை யென்னால் தடுக்க முடியுமா? (போகின்றார்கள்.)

அங்கம் 1. முற்றிற்று.

---

## அங்கம் II. களம் 1.

---

*இடம்: திருப்பரங்குன்றத்தில் கோவிலுக் கருகிலொரு மண்டபம். காலம்: ராத்திரி.*

(கமலினியும் கோமதியும் பேசிக்கொண் டிருக்கிறார்கள்.)

**கோமதி:**—கமலினி! நாம் வந்து இன்றைக்கு மூன்று நாட்களாகின்றன. கார்த்திகையுங் கழிந்தது கார்த்திகேயனையுங் கண்குளிரத் தெரிசனஞ் செய்தோம். இனிமேல் ஊருக்குப் போகவேண்டியது தானே? எப்பொழுது புறப்படலாமென்று உத்தேசிக்கிறாய்?

**கமலினி:**—ஊர் ஊரென்று அவசரப்படுகிறாயே, ஊரிலென்ன வேலையிருக்கிறதுனக்கு?

**கோமதி:**—ஊரில் வேலையில்லை. இங்கு நமக்கென்ன வேலையிருக்கிறது? நாம் வந்த காரியம் முடிந்தது. இனிமேல் ஊருக்குப்போக வேண்டியது தானே?

**கமலினி:**—நாம் வந்த காரியம் முடிந்தால் ஊருக்குப் போக வேண்டியது தான். ஆனால் நாம் வந்த காரியம் முடியவில்லையே. அதற்கு ளெப்படி ஊருக்குப் போகிறது?

**கோமதி:**—நீ சொல்வதொன்றுந் தெரியவில்லையே. வந்தகாரியமென்ன முடியவில்லை? கார்த்திகை தெரிசனத்திற்காக வந்தோம். கார்த்திகை கழிந்துவிட்டதே.

**கமலினி:**—இவ்வளவு தூரம் வந்தமட்டில் சமீபத்திலுள்ள முக்கியமான ஊர்களையும் பார்த்துவிட்டு ஊருக்குப் போகலாமென்றெண்ணுகிறேன்.

**கோமதி:**—புறப்படும்போது நீ யப்படி யென்னிடஞ் சொல்லவில்லையே?

(இன்னும் வரும்.)

டி. யம். சங்கரலிங்கம்பிள்ளை பி. ஏ.

# ஆன்மபோதம்.

இது ஆன்மா போதம் என்னும் இருமொழிகள்சேர்ந்த ஆறும் வேற்றுமைத் தொகைத் தொடர்மொழி. முதலாவதாய் நின்ற ஆன்மா என்னுஞ்சொல் ஆன்ம என்று அதனிறுதிகுறுகிநின்றது. இது ஜீவான்மா பரமான்மா இரண்டிற்கும் பொதுவாயதோர்சொல். ஜீவான்மாவை ஆன்மா எனக் கூறுதல் சித்தாந்தமும் பரமான்மாவை ஆன்மா எனக் கூறுதல் வேதாந்தமுமாம். இதனை,

"ஒன்றெண் மறைகளெல்லா முரைத்திட வுயிர்க ளொன்றி
நின்றன னென்று பன்மை நிகழ்த்துவ தென்னை யென்னின்
அன்றவை பதிதா னென்றென் றறையும்"

என்ற சிவஞானசித்தித்திருவாக்கானும் இதற்கு மாதவச் சிவஞான யோகிகள் அருளிய உரையானும் தெளிக. ஈண்டுச் சித்தாந்த வழக்கின்படி ஆன்ம சப்தத்திற்கு ஜீவான்மாவே பொருளாம். வேதாந்த வழக்கின்படி நேர்ந்துழிக்கூறுதும். இனி இரண்டாவதாய் நின்ற போதம் என்னும் சொல் ஞானம் (அறிவு) என்னும் பொருளதாம். ஆகவே ஆன்மபோதம் என்னும் தொடர்மொழிக்கு வேற்றுமை யுருபை விரித்துக் கூறுமிடத்து "ஜீவான்மாவினது ஞானம்" அறிவு என்பது பொருளாம்.

இனி ஜீவான்மா இதுவென்றும், அதன் அறிவு இத்தன்மைத் தென்றும், அவ்வறிவு செல்லுமிடங்கள் இவை என்றும், அவற்றால் ஆகும்பயன் இவை என்றும், செல்லவேண்டியது இதுவென்றும் ஐந்து வகையாகப் பிரித்து முறையே விரித்துக்கூறுதும்.

காணப்படுகின்ற உலகமும் உடலுமாகிய பிரபஞ்சப் பொருள் ஒன்று. பிரபஞ்சமெனினும் பாசமெனினும் ஒக்கும். உடல்தோறும் யான் என்னும் சொல்லிற்குப் பொருளாயும், உடலைத் தற்கிழமை யாய் யான் என்பதோடமையாது பிறிதின் கிழமையாக எனதென்றுங் கூறுவதால் உடலின் வேறாயும், அறிவுடையதாயும் உள்ள ஜீவான்மா வென்னும் பொருள் ஒன்று. ஜீவான்மா எனினும் உயிர் எனினும் பசு எனினும் ஒக்கும். இவற்றுள், முன்னையதும் இறுதி

யதும் வடமொழி. நடுவணது தென்மொழி. இவ்வுயிர் வேண்டிய தொன்றைப் பெறுமையும் வேண்டாத தொன்றைப் பெறுதலும் ஒரோவழி எண்ணிய எண்ணியபடி எய்துதலும் காண்கின்றமையின் உயிரின் வேருய் உயிருக்குயிராய் நின்று உயிர்களின் கன்மத்துக்கீடாக இவ்வாறு செய்விப்பான் வேண்டப்படும் இறைப்பொருள் ஒன்று. இறை எனினும் பதி எனினும் ஒக்கும். ஆகப்பொருள்கள் மூன்றுண்டென்றறியத்தக்கது.

இம் முப்பொருள்களுட் பதியாகிய பரமான்மாவும் ஜீவான்மாவும் சித்துப்பொருளாயினும் பரமான்மாவின்முன் பிரபஞ்சம் முளைத்து நில்லாமையால் அதனைப் பரமான்மா சுட்டி அறியாது. பிரபஞ்சம் சடமாதலால் பரமான்மாவை அறியாது. இவ்விருபொருளும் இவ்வாறு சூரியனும் விடயமும் போல ஒன்றனையொன் றறியாதாகவே அறியாத பொருள் பயப்பாடிலவாய்ச் சூன்ய மெனப்பட்டு வழுவாமாகலின் சூரியனையும் விடயத்தையும் அறியும் கண்போல இவ் விரண்டனையும் அறிவதாய் இரண்டின் வேருயுள்ள பொருள் ஒன்று வேண்டப்படும். அதுவே ஈண்டெடுத்துக் கொண்ட ஆன்ம சப்தத்திற்குப் பொருளாகிய நடுநின்ற ஜீவான்மாவாம். இக்கருத்தினை,

> "யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
> சத்தே யறியா தசத்தில தறியா
> திருதிற னறிவுள திரண்டலா வான்மா"

என்னும் சிவஞானபோதம் ஏழாஞ் சூத்திரத்தான் இனிதுதெளிக. இவ்வான்மா ஒன்றைப்பற்றி அறியுந் தன்மையால் தூலசித்தெனப்படும். பரமான்மா தனித்தறியுந் தன்மையால் சூக்கும சித்தெனப்படும்.

ஜீவான்மா அறியப்படுமோ படாதோ? படுமெனின் "இருதிறனறிவுள" தென்றல் பொருந்தாதாய் மூன்றனையும் அறிவதென்னல் வேண்டும். படாதென்னின் மேற்கூறியவாறு பயப்பாடின்றிச்சூனியமெனப்பட்டு வழுவாம். ஆதலின் மலரின்கண் வாசனையானது மலர்போல விளங்கித்தோன்றுமலும் சூனிய மல்லாமலும் மலரின்

கண் அடங்கித்தோன்றுவதுபோலப் பரமான்மாவாகிய சத்தையும் பிரபஞ்சமாகிய அசத்தையும்போலத் தனித்தறியப்படாததாய் அவ்விரண்டனையும் அறியுமுகத்தானறியப் படுவதாம். சதசத்தாகிய இரண்டனையும் அறிதற்கு உரிமையுடையதாதலின் ஆன்மா சதசத்தெனப்படும். இதுகாறும் ஆன்மா இதுவென்று கூறப்பட்டது.

இனி அதன் அறிவு இத்தன்மைத்தென்பது வருமாறு:—கண்ணினிடத்துள்ள ஒளி தானே ஒன்றனை அறிவதின்றிச்சூரியன் சந்திரன் அக்கினிமுதலியவற்றின் ஒளியினைத்துணையாகக்கொண்டு விடயங்களை அறியுமாறுபோல ஆன்மாவினிடத்துள்ள அறிவு தானேயொன்றனை அறிவதின்றிப் பரமான்மாவாகிய இறைவன் அந்தரியாமியாய்நின்று கருவிகளைக்கூட்டியுந் திருவருளைக் கூட்டியும் அறிவிக்க அறியும். கண் ஒளியோடுகூடி ஒளியாய்நின்று அறிந்தும், இருளோடுகூடி இருளாய்நின்று அறிதல் வியாபாரமின்றியும் இருப்பதுபோல ஆன்மாவும் அறிவிக்கும் துணையோடுகூடி அறிவாய் அறிந்தும், அறியாமையைச் செய்வதோடுகூடி. அறியாமையாய் அறிவு தொழிற்படாமலும் இருக்கும். அறியாமையோடு நிற்கும் அவ்வதரம் கேவலம் என்னப்படும். அறிவோடு கூடிநிற்கும் அவதரம் சகலமெனவுஞ் சுத்தமெனவும் இருதிறப்படும். அங்ஙனம் அறியுங் காலத்தும் ஒன்றனை அறியுங்காற் பிறிதொன்றனை அறியாது. இதுபற்றியே, சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியுமென்பர். சகலத்தில் நின்றறியும்பொழுது அறிவிக்கும் துணை பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் என முத்திறப்படும். சுத்தத்தில் நின்று அறியும் பொழுது அறிவிக்குந்துணை திருவருள். சகலத்தில் அறியப்படும் பொருள் பிரபஞ்சம். சுத்தத்தில் அறியப்படும்பொருள் பதி. இதுகாறும் அறிவு இத்தன்மைத்தென்று கூறப்பட்டது.

இனி அறிவு செல்லுமிடங்கள் வருமாறு:—கேவலத்தில் ஆணவமலத்தால் அறிவு தொழிற்படாமல் கண்ணில்லாக்குழவி இருட்டறையிற் பட்டுழல்வதுபோல் வருந்தும். அங்ஙனம் வருந்தும் ஆன்மாவிற்கு இறைவன் கிருபையினால் இரங்கிக் குருடனுக்குக்கோல் கொடுப்பதுபோல் மாயையினின்றும் சரீரத்தைக் கொடுப்பன். சரீ

ரத்தைப் பெற்றபொழுது சகலம் இதில் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என்னப்படும் மூன்றனையும் துணையாகக்கொண்டு விடயங்களை அறியும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் இந்திரியங்களைத் துணையாகக்கொண்டு விடயங்களை இஃது யாதோ ஒன்று தோன்றுகின்றதென நிருவிகற்பமாய் அறியும் ஆன்மாவின் அறிவு இந்திரியப் பிரத்தியட்ச அறிவு. அந்தக்கரணங்களுடன் கூடிப் பெயர் ஜாதிமுதலிய வற்றால் விடயங்களைப் பகுத்தறியும் ஆன்மாவின் அறிவு மானதப் பிரத்தியட்ச அறிவு. அறிந்த விடயங்களில் விருப்பு வெறுப்புற்றுத் தன் மாட்டு நிகழ்வது தன்வேதனைப் பிரத்தியட்ச அறிவு. நேராக வின்றிப் பிறிதோரிடத்துள்ள பொருள்களையறிவது யோகப்பிரத்திட்ச அறிவு. இந் நான்கும் பிரத்தியட்சம் என்னும் பிரமாணத்தைக் கொண்டு ஆன்மாவின்கண் நிகழுமறிவு.

தெரிந்த பொருள்களைக் கொண்டு அதனோடு தொடர்புடைய தெரியாத பொருளை ஆன்மா அறிவது அனுமான அறிவு. அதாவது புகையைக் கண்டவிடத்து அதுகண்டு அக்கினி ஆங்குண்டென்றறிவதுபோலென்க.

தெரியாத தேவலோக நரகலோகங்களை ஆகமவழியாக உண்டென்றறியும் ஆன்மாவின் அறிவு ஆகம அறிவு. இவ்வுலகத்தும் தெரியாத தொன்றைத் தெரிந்தவன் சொல்லக் கேட்டறிவதும் ஆகம அறிவுளடங்கும். ஆகமம் என்பது ஆப்தவாக்கியம். அது பரமாப்தனாகிய இறைவன் அருளிச்செய்த வாக்கியத்தைச் சிறப்புப்பொருளாய்க் குறித்து நிற்கும்.

இவ்வாறு பூமி, சொர்க்கம், நரகமாகிய மூன்றுலகப் பொருள்களை அறியுமான்மா இப் பொருள்களின் நிலையாமையை யுணர்ந்து நிலையுடைப்பொருள் இதுவெனத் தேறுமாற்றலின்றி அதனை நூல்களால் துணிவுபெறத் தெளியவெண்ணி நூலாராய்தல் கல்வி அறிவு என்னும் ஆகம அறிவு.

நூற்பொருளைச் சந்தேக விபரீதமறப் பிறர்பாற்கேட்டுத்தெளிவது கேள்வியறிவு என்னும் ஆகம அறிவு. கல்விகேள்விகளாலன்றி

உலகம் தோன்றி நின்றொடுங்குதலை அநுபவமாகக் கண்டுணர்வது பிரத்தியட்ச அறிவு.

குடத்தைக் கண்டமாத்திரத்தில் இது தோன்றுவதற்கு முதற் காரணமாகிய மண்ணும் உபயோகிப்போரின்பொருட்டுச் செய்விப் பவனாகிய குயவனும் உண்டென்றறிவதுபோல, உலகத்தைக்கண்ட மாத்திரத்தில் இது தோன்றுவதற்கு முதற்காரணமாய் ஒருபொரு ளும் நிமித்தமாய்த் தோற்றுவிப்பா னொருவனை முதலும் வேண்டப் படும். படவே அவை முறையே மாயையும் ஆன்மாவின் நிமித்த மாகிய இறைவனுமெனப் பதி பசு பாச மூன்றும் உண்டென்றறி வது அனுமான அறிவு.

இவ்வாறுண்டென்றறிந்த முப்பொருள்களின் இலக்கணங்களை யும் அவற்றுள் பாசத்தின் நிலையாமையினையும் ஆன்மா உணர்ந்து அதனைவிட்டுப்பதியையடையுமுபாயமாகிய சாதனத்தையும் பதியை ப்பசுவடைந்தபோதுள்ள அனுபவநிலையையும் நூல்களால் அறிவது ஆகமஅறிவு,காணப்படாத முப்பொருள்களின் சம்பந்தமான பிரத்தி யக்ஷம், அனுமானம், ஆகமம் என்னும் இம்மூன்றறிவுகளையும் ஆராய்ச்சியறிவு என்றும் கூறுவர், இதுவரை சகலம். இனிச் சுத் தம்.

இங்ஙனம் உணர்ந்தவான்மாவானது பாசத்தைநீக்கிப் பதியு டன் கலந்துநிற்றலை அனுபவமாய் அறியவிரும்பி அது ஆராய்ச்சி யறிவாலாகாததெனத்துணிந்து அது கூடு முறையைச் சிவாநுபவ முள்ள தேசிகராற்பெறச் சிந்தித்து மிக்க பசியுடையவன் உணவை நாடுவதுபோல் நாடி நல்லாசிரியரை அடைந்து அவர் மனங் கசியப் பணிவிடைசெய்து அவர் அருளுபதேசத்தைப்பெறல் ஆகம அறிவு. குரு ஆப்தரானதால் அவருரை ஆக்மமெனப்பட்டது.

அவ் வுபதேசத்தில் உறைத்து நின்று சாதிப்பதாகிய சிந்தித் தல் அனுமான அறிவு. உபதேசமாகிய காணப்பட்டதொன்றைக் கொண்டு உபதேசத்தோடியைபுடைய அனுபவநிலையை அப்பிரத்தி யட்சமாய்க் காண்டலின் அனுமான அறிவெனப்பட்டது. இந்நிலை சவிகற்பநிட்டை. இதனைச் சாதன அறிவென்றும் கூறுவர்.

இவ்வாறு சாதித்தவழிப் பாசம் அறவேநீங்க அருளைத் துணையாகக்கொண்டு ஆன்மா பதியுடன் கலந்து பதிவேறு ஆன்மா வேறெனப் பிளவுபடநில்லாது அத்துவிதமாய் நிற்றல் அனுபவ அறிவென்னும் சிவப்பிரத்தியட்சஅறிவு.

இந்நிலையிற் பதியே யன்றி ஆன்மா இல்லை யென்பர் ஒரு சாரார். பதியும் ஆன்மாவும் பாசமும் உண்டென்பர் மற்றொரு சாரார். இவ்விருவர் கருத்தும் பொருந்தாது என்னை? கட்டையினிடத்துப் பசுமையும் அக்கினியு மிருக்கின்றன. பசுமை மேற்பட்டிருக்கும்பொழுது அக்கினி தோன்றுவதில்லை. அக்கினி மேற்பட்டிருக்கும்பொழுது பசுமை தோன்றுவதில்லை. பசுமை மேற்பட்டிருக்கும்பொழுது பசுமையாயும், அக்கினி மேற்பட்டிருக்கும் பொழுது அக்கினியாயும் கட்டையிருக்கும். பசுமையாயிருக்கும் பொழுது அக்கினி அடங்கியிருக்கும். அக்கினியாயிருக்கும்பொழுது பசுமை கெட்டுக் கட்டைபொருட் கெடுதலின்றி தன்மை கெட்டு நிற்கும். பசுமை பாசத்துக்கும் கட்டை பசுவுக்கும் அக்கினி பதிக்கும். உவமை. இதுபோற் பாசங்கெட்டு ஆன்மா பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம்பெற்றுச் சிவமாய் நிற்குமாதலின் ஒன்றென்பதும் பாசங் கெட்டொழிதலால் மூன்றென்பதும் கூடாதாதலினென்க.

இவ்வாறாகவும் முத்தியில் ஒன்றென்று வேதாந்தமும் மூன்றென்று சித்தாந்தமும் கூறுகின்றதென்னையோவெனின் பதியும் ஆன்மாவும் பிளவுபடப் பிரிக்கமுடியாத ஒற்றுமைநயம்பற்றி ஒன்றென்று வேதாந்தத்திற்கும், பாசங் கெட்டொழிதல் முத்திக்குச் சிறந்த ஏதுவாதல் பற்றி மூன்றென்று சித்தாந்தத்திற்கும் கருத்தாதலாலென்க. பாசம் ஏனைப்பெத்தரிடத்திருப்பதால் நித்தத்திற்கும் இழுக்கில்லை. இதுபற்றிய சங்கை உத்தரங்கள் ஈண்டு விரிப்பிற் பெருகுமென்றஞ்சி விடுக்கின்றாம்

ஆன்மாவின் அறிவு துணையை இன்றி அறியமுடியாதென்பது யாண்டுஞ் செல்லுமாதலின் அருள்துணையாகக்கொண்டு பதியையடையுமெனவும், சிவம் அனுபவமாய் விளங்குதலின் சிவப்பிரத்தியட்சம் எனவும் கூறப்பட்டது. பெத்ததசையிலும் ஆன்மாவுடன் சிவம் கலந்து மறைந்துநின்று முத்தி தசையில் விளங்கிநிற்குமாத

லின் சிவப்பிரத்தியக்ஷ அறிவை இயற்கை அறிவென்றும், விட்டு நீங்குதல் பற்றி ஏனையவெல்லாம் செயற்கையறிவென்றும் கூறப் படும். இதுவரை அறிவு செல்லுமிடங்கள் இவை என்று கூறப் பட்டது.

இனி அவற்றாலாம் பயனும் செல்லவேண்டுமிடமும் வருமாறு:- உலகப் பொருள்களினறிவால் பிறந்திறந்துழலுதலும், கல்வி அறிவு முதல் சிந்தனை யறிவு ஈறாக எல்லா அறிவாலும் பிறவி நீக்கத்துக் கேதுவாதலும், சிவப்பிரத்தியக்ஷ அறிவாற் பிறப்பிறப்பு நீங்கிப் பேரின்ப மெய்துதலும் பயனாம்.

ஆதலின், பெறுதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்ற ஆன்மா உலக அறிவுகள் இவையெனக் கண்டுகளித்துக் கல்வியறிவுமுதல் முறையே ஒவ்வொன்றாகப்பற்றி அவற்றின் முயற்சியாற் சிவப் பிரத்தியட்சஅறிவினை யெய்திநிற்றல்வேண்டும். இதுவே ஆன்ம போதத்தினுண்மையாம். இவ்வான்மபோதத்தினையே சர்வஞானோத் தரமுதலிய சிவாகமங்கள் மிகப்பாராட்டிக்கூறுகின்றன. ஆதலின் இவ்வரும்பெரு நிலையைப்பெற்று இன்புறுதற்கு ஒவ்வொருவரும் முயலவும் அம்முயற்சி முற்றுப்பெறுதற்கு இறைவன்றிருவருள் துணைநிற்கும்வண்ணம் இறைவனைப்பிரார்த்திக்கவும் செய்வோமாக.

## முடிவுரை.

எடுத்துக்கொண்ட விஷயம் ஆன்மபோத மென்பதூஉம், இது இருமொழிகள் சேர்ந்த வேற்றுமைத்தொகைத் தொடர்மொழி என்பதூஉம், ஆன்மசப்தம் பரமான்மா ஜீவான்மா இரண்டிற்கும் பொது வென்பதூஉம், அவ்வாறு கூறுவது முறையே வேதாந் தமும் சித்தாந்தமுமா மென்பதூஉம், ஈண்டுச் சித்தாந்த வழக்கின் படி ஜீவான்மாவே பொருளா மென்பதூஉம், போதம் அறிவு என் பன ஒரு பொருட் கிளவி என்பதூஉம், ஆன்மா, அறிவு, செல்லுமி டங்கள், பயன், செல்ல வேண்டுமிடம் என இவ்விஷயத்தை ஐவகை யாய்ப் பிரித்துக் கொள்ளப்படு மென்பதூஉம், உடலின்கண் யான் என்னும் சொற்குப் பொருளாய் நிற்பது ஆன்மா வென்பதூஉம், இது பொருளைப் பற்றி நிற்கும் உரிமையால் தூலசித்தெனப் பெயர் பெறு மென்பதூஉம், இதனறிவு பாசத்தையும் பதியையும் அறியு

மென்பதூஉம். அறியுங்காற் கண்போல் துணைகொண்டு அறியும் என்பதூஉம், பாசத்தை யறியுங்கால் பிரத்தியட்சம், ஆகமம், அனுமானமென மூன்றுந் துணையாமென்பதூஉம், இவற்றைக் கொண்டறியும் உலகப் பொருள்களின் இன்பம் நிலையன் றெனக்கண்டு நிலையான இன்பத்தையுடைய பதிப் பொருளையடைய வெண்ணி அடைய முயலுங்காலுண்டாம் அறிவு, கல்வியறிவு, கேள்வியறிவு, உபதேசஅறிவாகிய ஆகமஅறிவு, சிந்தனை அல்லது சாதன மென்னும் அனுமானஅறிவு, அனுபவமென்னும் சிவப்பிரத்தியக்ஷஅறிவு எனப்பலவகைப்படு மென்பதூஉம், சிவப்பிரத்தியக்ஷ அறிவே பேரின்பம் பயக்கு மாதலின், ஏனையவற்றை விட்டு இதனையே அடைய வேண்டு மென்பதூஉம், இதுவே ஆன்மபோதத்தின் உண்மைப்பொருளா மென்பதூஉம் பிறவுமாம்.

பொ. முத்தய பிள்ளை,

சிவாநுபூதிச் சித்தாந்த சங்கம்,

தூத்துக்குடி.

---

# தனவணிகர் விவாக விளக்கச் சூறுவை

தனவணிகர் விவாகவிளக்கம் என்ற பெயருடன் "கண்டனூர் நா. பெ. நா. மு. முத்துராமன்செட்டி" என்ற கைசாத்துக் கொண்டு புறப்பட்ட துண்டுப்பத்திர மொன்றைக் கண்டனம். இந்த விளக்கத்தில் கூறப்பட்ட விஷயங்களைப்பற்றி ஆராய்வாம்.

முதலில் மனுதர்ம சாஸ்திரத்தில் எட்டுவகை விவாகங் கூறப்பட்டதென்றும், வைசியனுக்கு ஆசுரவிவாகம் விதிக்கப்பட்டதென்றும் கடைவிரிக்கின்றார். அவற்றை மறுத்தவர் யாவர்? எதற்காக இக்கடையை யிங்கே விரிக்கவேண்டுமோ?

பின்னர்த் தாரைவார்ப்பதையும் மந்திரங் கூறுவதையும் பற்றிப் பேசுகிறார். அவற்றைப்பற்றிப் பேசவும் என்ன அவசியமோ?

எடுத்த வியவகாரம் மாங்கல்யம் மணமகன்கையாற் கட்டவேண்டுமென்பதும், அதன் மறுதலையுமேயாம். ஆகவே மாங்கல்யதாரணம் மணமகன்கையாற்றான் செய்யவேண்டுமென்பதை மறுத்து மணமகனுக்குப் பிரதிநிதியாக வேறொருவர் கட்டலாமென்பதை நியாயவாயிலாகச் சாதிப்பதொன்றே தமது கடமையென்பதை இந்த மு. செட்டியார் கவனிக்காமல் ஏதேதோ வீண்கடைபரப்பி விருதாகோஷஞ் செய்கின்றனர். மனுதர்மசாஸ்திரத்தில் மாங்கல்யத்தைப்பற்றிச் சொல்லவில்லை யென்றிவர் கூறுகிறார். மாங்கல்யதாரணம் கூடாதென்று அது சொல்கிறது? பிராமணர்கள் இன்றைக்கும் மாங்கல்யதாரணஞ் செய்து வருகின்றனரே. வைதிக ஒழுக்கத்துட்பட்ட ஏனையவருணத்தாரும் மாங்கல்யதாரணமே பிரதானமாகச்செய்துவருகின்றனரே. தெய்வயானை, திருக்கல்யாணம் உக்கிரகுமாரபாண்டியர் திருக்கல்யாணம் முதலியவற்றில் மாங்கல்யதாரணம் மணமகன் திருக்கரத்தாற் செய்ததாகக் கூறப்பட்டுள்ளனவே. தேவேந்திரன் மனைவியாகிய இந்திராணியின் கழுத்தில் மாங்கல்யதாரணஞ் செய்யப்பட்டிருப்பதைப்பற்றி அருணகிரிநாதர் முருகக்கடவுளைத் தோத்திரஞ்செய்யுமுகமாக "சசிதேவி மாங்கல்யதந்துரக்ஷாபரண" என்று கூறியிருத்தலு முணர்க. இன்னும் உலகத்து நான்குவர்ணத்துமக்களும், மாங்கல்யதாரணஞ் செய்யு மியல்பினரென்பது

புராணவாயிலாகவும் பிரத்தியக்ஷ வழக்கமாகவும் காணப்படுகிறது. இத்தகைய சர்வப்பிரசித்தமான மாங்கல்யதாரணத்தைப்பற்றி அறிவுடையவர் யாவராயினு மறுக்க முன்வருவரோ?

நம் வைசியமக்கள் அநுட்டிக்கத்தக்க கிரியைகளெல்லாவற்றையுங் கிரமமாகக்கூறும் அகோர சிவாசாரியர் பத்ததியில் நாயகனே மாங்கல்யதாரணஞ்செய்ய வேண்டுவது முக்கியமென்றுகூறுவது ஸ்ரீ கரு.முத்து. தியாகராசச் செட்டியாரவர்களால் 28-4-13 வைசியமித்திரனில் பிரமாண பூர்வமாகக் காட்டப்பட்டுள்ளது. இவர் அகோரசிவாசாரியர் கூறியவை யனைத்தும் பிராமணருக்கேயன்றி மற்றையோர்க்கில்லை யென்கிறார். அப் பத்ததியில் சைவ சோடசக் கிரியாரம்பத்தில் உபோற்காதவிதியில் அதிற் கூறப்படும் விவாகாதி கிரியைகளனைத்தும் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களாகிய நான்கு வருணத்தார்க்கு முரியவையென்று பல பிரபல ஆகமப் பிரமாணங்காட்டித் தீர்மானித்திருப்பதை இந்த மு. செட்டியாரினியேனும் படித்தவரிடத்துக் கேட்டுத் தெளிந்துகொள்வாராக.

தாலியைத் தாங்கிக்கொண்டு போகிறதென்று ஒருவேடிக்கை பேசுகின்றனர். இங்ஙனம் பேசுதல் விளையாட்டுப் பிள்ளைகள் பேச்சேயாவதன்றிக் கல்வியறிவுடையார் வியவகார மாகாமை தெளிவாராக.

யாம் எடுத்த வியவகாரத்துக்குப் பிரத்தியக்ஷப் பிரமாணங்களுடன் அகோர சிவாசாரியர் பத்ததி ஸ்காந்தமுதலிய நூலாதாரமுங் காட்டியிருக்கின்றோம். இந்த மு. செட்டியார் தமது கக்ஷியைத் தாபிக்கவேண்டுமாயின் தாலிகட்டுவது வேண்டாமென்பதுவது மணமகனுக்குப் பிரதிநிதியாக வேறொருவன் தாலிகட்டலாமென்பதுவது நூலாதாரங் கட்டல் வேண்டும். அங்ஙனம் கட்டாதவரை இவர் எடுத்த வியவகாரந் தோல்வியுற்று ஒழிந்துபோனமையறிந்து தாமும் மௌனமாயிருக்க வேண்டும். இவ்விரண்டிலொன்று செய்யாது எடுத்த வியவகாரத்துக்குச் சம்பந்தமற்ற வெற்றுரை பரப்புவாராயின் "மாபறவை புல்லூருவஞ்சுவபோல் தம்வல்லுருவஞ்சன்மின்" என்றுதம்மைக் காட்டிக்கொள்பவராவரென்பது திண்ணம்.

இன்னும் இராமபிரானுக்கு முற்பாட்டனாகிய அரிச்சந்திரன் காலமுதற்கொண்டே தாலிகட்டுகிற வழக்கமிருந்து வருவதை இவரறிந்திலர் பாணிக்கிரகணம், மாலையிடுதல் தாலிகட்டுதலாகிய மூன்றுவழக்கமும் இன்றும் நடந்து வருகின்றன. பாணிக்கிரகணம் மாலையிடுதல்' இவற்றையும் மணமகனுக்குப்பதிலாக வேறொருவர்செய்கிறவழக்கமில்லையே. பாணிக்கிரகணத்துக்குமுன் மணமகன் மணமகளைத் தீண்டலாகாதென்றே அந்நியரைக்கொண்டு தாலிகட்டச் செய்கிறதாக இந்த மு. செட்டியார் கூறுகின்றார். அகோரசிவாசாரியர் பத்ததியாதிகளில் கன்னியாதானஞ் செய்தபின்னர் புருடன் மாங்கல்யந்தரித்தலும்அதன்பின்கைப்பிடித்தலுங்கூறப்பட்டுள்ளன. இதனால்நாம் ஊகிக்கவேண்டியது,மாங்கல்யதாரணத்தால் மனைவியைத்தனக்குரிமையாக்கிய பின்னர் கைப்பிடித்தலே தக்கதாகுமென்பதாம். மாங்கல்யதாரணஞ் செய்யாமற் கைப்பிடித்தல் தகாதென்பது மிதனாலுணரலாகும்.

இங்ஙனம் புருடனாற் பிரதமத்திற் செய்யத்தக்க அவசிய கிரியையாகிய மாங்கல்யதாரணத்தைப் புருடன் தீண்டக்கூடாமையால் வேறொருவன் செய்வதாக இவர் கூறுதல் பெருநகைப்புக்கிடமாகின்றது. நமது வைசிய ஜாதியில் சடங்குகள் முன்னும்பின்னுமாக மாறியிருக்கிறதாகக் கூறுகின்றார். ஏன் மாறவேண்டும்? மாறியிருப்பது தெரிந்தபின் அம்மாறுபாட்டை யொழித்து நூன்முறைப்படி ஒழுங்காகக் கிரியைகளைச் செய்தலன்றோ அறிவுடையார் கடமையாகும்.

புருடனல்லாத வேறொருவன் தாலிகட்டுதற்குப் பிரமாணம் வன்னியுங்கிணறு மிலிங்கமு மழைத்த படலத்திலிருப்பதாகக் கூறுகிறார். அப்படலத்திலெங்குள்ளது? இது முயற்கோடு ஆகாயத்தாமரையேயன்றி வேறன்றோ மென்பதைத் திருவிளையாடற் புராணம் படித்தார் யாவருமுணர்வர்.

பட்டினத்தடிகள் "கைப்பிடிநாயகன்" என்று சொல்லியிருப்பதால் அவர்காலத்திற் றாலிகட்டுதலில்லை யென்று கூறுகின்றார். பாணிக்கிரகணம் என்னும் வடசொல் தமிழில் கைப்பிடித்தலென்று

கூறப்படும். விவாகத்தின் பரியாயநாமங்களுள் அதுவுமொன்றாகும். அங்ஙனமாயின் "கைப்பிடிநாயகன்" என்பதற்கு விதி பூர்வமாக விவாகஞ்செய்துகொண்ட நாயகன் என்பது பொருளாம். அக்கினி சாக்ஷியாகக் கைப்பிடித்த உரிமை நாயகனையும், வஞ்சித்து ஒழுகுகின்றனரென்று வெறுத்துக் கூறும் அடிகள் அவ்வுரிமை தோன்றக் கைப்பிடி நாயகன் என்று கூறினரென்பது முணர்க. இதனால் மாங்கல்யதாரணம் இல்லையென்று கூறுதலிவர் அறியாயாமையேயாகும்.

விதிக்குமாறாகச் செய்யப்படும் விவாக கிரியைகளே நம்மவர் க்ஷேமத்திற்குக் காரணமென்று கூறுகின்றார். இது பேராச்சரியமாக விருக்கின்றது. மனிதர் இன்பதுன்பங்களுக்குக் காரணம் அவரவர் செய்த நல்வினை தீவினைகளேயாம். இவ்வுண்மையுணராது பிறரால்தன் மனைவிக்குத் தாலிகட்டுவித்தலே க்ஷேமத்திற்குக் காரணமென்றிவர் மயங்கிக் கூறுதல் பெருநகை விளைப்பதாகும். இம்மயக்கம் இவர்க்கு எப்பிறப்பிற் றெளியுமோ?

இவர் மேற்கோளாகப் பிழைபட்ட சில செய்யுட்களை யெழுதியிருக்கின்றனர். அச்செய்யுட்களில் இவர் மேற்கொண்ட மூன்றாவது மனிதன் றாலிகட்டுதனுக்குப் பிரமாணம் யாண்டாயினுமுளதா? ஒன்றுமின்றென்பது யாவரு முணர்வர். இங்ஙனம் வேண்டாத பல பாட்டுக்களைப் பரப்பினால் ஒன்றுமறியாத சிலர் மயங்கிப் பிரமாணங் காட்டிவிட்டாரென்று இவரைக் கொண்டாடுவார்களென மதித்தார் போலும். அம்மதிப்பு இவர்க்கு அவமதிப்பையே தருவதாகும்.

இன்னும் இந்த மு. செட்டியார் தாம் கூறும் விஷயங்களுக்கு மேற்கோளாகத் தாம் எழுதிய கல்யாணச்சடங்கு விளக்கம் என்னும் புத்தகத்தைப் பார்க்கும்படி அடிக்கடி கூறுகின்றார். அப்புத்தகம் முதனூற் பிரமாணங் காட்டி யெழுதப்பட்டிருக்குமோ வென்று ஐயுற்று ஒரு பிரதி வாங்கிப் பார்த்தோம். அதன்கட் புராதன நூன் மேற்கோளொன்று மின்றி இப்பொழுது நடைபெறுஞ் சாத்

திர மாறுபாடான கிரியைகளைத் தம் மனம்போனபடி விளையாட்டுச் சிறுவர் பாடும் பாட்டுப் போன்ற சில போலி, வழுப்பாட்டுக்களாற் கூறியிருக்கின்றனர். அவ்வாபாச நூலை மேற்கோள் காட்டியதனல் இவர்க்கு வேறு நூலாராய்ச்சி செய்தற்கு வலியில தென்பது வெளியாம். அந் நூலிற் பல சொறபொருட் பிழைகள் மலிந்துள்ளன. இவர் வாயில் வருவனபெரும்பாலும் பிழையுடையன வென்பது சிறுவரு முணர்ந்துளராதலின், அவற்றை யீண்டெடுத்துக் காட்டல் மிகை யென விடுத்தாம்.

''கீழ்மக்களுக்கு சாஸ்திரம் சட்டங்குகளேற்படாததினுல் அவர்கள் மனேபீஷ்டம் போல் தாலிகட்டிக்கொண்டு போகிறது. அந்த ஞாயம் நம்மனேருக்குப் பொருந்தாது'' என்கிறுர். இதனுல் தாலி கட்டுகிற வழக்கமுள்ளவர்களை யெல்லாம் இவர் கீழ்மக்களென்று வாய் கூசாது பகர்கின்றுர். இதைவிட அதிபாதகம் வேறுண்டோ? ஆதிசைவர்கள், பிராமணர்கள், வேளாளர்கள் முதலிய உயர்ந்தோர் பலரும் தாலி கட்டுவதே பிரதானமான வழக்கமாகக் கொண்டிருப்பதால் அவர்களை யெல்லாங் கீழ்மக்களென்று தூஷிக்கத்துணிந்த இவர்க்கு இப்பொழுது அரச தண்டனை சமீபத்திலில்லாவிடினும் நரக தண்டனையடைந்து துடிதுடித்துக் கதறுவாரே யென்று இரங்குகிறேம். ஐயோ பாவம்! விருத்தப் பருவமடைந்த இவர்க்கு இக்கதி வந்தது பரிதபிக்கத் தக்கதே.

இதுவரை எங்காவது திருவிழா கும்பாபிஷேகம் நடக்குங் காலத்தில் ஏதோ வாழ்த்துப்பாட்டுக்களைப் பாடித்திரிந்த இந்த மு. செட்டியார் அம்மட்டிலமையாது சகலகலா வல்லவர் போல அபிநயித்து மனுதர்மசாஸ்திரம் புராணங்கள் இவைகளைக் கற்றவர் போலப் பகட்டிவாதுக்குக்கிளம்பி விளக்கைப்பிடித்துக் குழியில் விழுவாராயினர். முன்னரே ''சற்குருவிளக்கம்'' என்று பேருள்ள விளக்கொன்றைப் பிடித்தார். அது பிரசண்டமாருதத்தாலவிந்து இவரை அந்தகாரத்தில் அமிழ்த்தியது. இப்போது விவாகவிளக்கைப் பிடித்தார். இது சூழுவளியா லவிந்தது. இவர் கைதொட்ட விளக்கு உடனேயவிந்து இவரை யிம்மையிலும் இருளிற்றள்ளுவதால் இனியா

வது அடங்கிக்கிடந்து அமைதியுறுவாராயின் நன்று. நான்குவரி யாவது பிழையின்றி யெழுதத்தெரியாத இந்த மு. செட்டியாரா வாதவிஷயங்களில் வெளிவரத்தக்கவர்?

இனி, ஒரு நூலாயினும், கவியாயினும், துண்டுப் பத்திரமாயி னும் வெளிவரின் அதனை நோக்கியே, ஆக்கியோரது யோக்கிய தையை உலகம் மதித்தல் வழக்காறுதல் பற்றி இந்த விவாக விளக்கைப் பிடித்து வெளிப்பட்ட மு. செட்டியாரின் படிப்பு நிலை யையும் அவ்விளக்கின் தன்மையால் அளந்து காட்டுவோம்.

(1) இந்த மு. செட்டியார் "விவாகம் யென்பது" என வரைந்துள்ளார், 'யென்பது' என யகர வர்க்க எகரத்தை மொழி முதலாகக்கூற யாண்டுக் கற்றனரோ? இஃதொன்றோ 'யெனக்கூறி' 'யெந்த' 'யேற்பட்டிருக்கிற' 'யெடுத்து' 'யென்று' 'யேற்பாடு' 'யேற் பட்ட' 'யென்றிருப்ப' என்று பற்பல இடங்களில் உயிர் முதன் மொழி வருமிடங்களிலெல்லாம் யகரவர்க்க எகரமே எழுதுகின்றார். இவையாவும் யகரவுடம்படுமெய் பெற்றனவல்ல. இவற்றால் இந்த மு. செட்டியார் மொழிமுதலெழுத்து இலக்கணங்கூட அறிந்திலா ரென்பது புலனும். சிற்றிலக்கணங் கற்குஞ் சிறு பிள்ளைகள் கூட இவ்விலக்கணமறிவர்.

(2) "பிருமணர்" என்று இரண்டிடங்களிலெழுதியுள்ளார். பிராமணர் என எழுதலே முறை. "பிருமணர் என வல்லினமிட் டெழுத யாரிடம் படித்தனரோ?

(3) "வார்சுகளேர்ப்படும்" என வரைந் துள்ளார். மேலே இடையின ரகரம் வருமிடத்து வல்லின றகரத்தைப் புகுத்தது போல் "ஏற்படும்" என்று வல்லின றகரம் வருமிடத்து "ஏர் ப்படும்" என இடையின ரகரத்தைப் புகுத்திவிட்டார். இவரது மெய்ப் புரட்சியை என்னென்று வியப்போம்.

(4) "எசை குடிமானத்தில்" எனத்தீட்டுகின்றார். இசை குடிமான மென்பதே முறையும் பொருட் பொருத்தமு முடைய

தாகவும் "எசை குடிமானத்தில்" என உயிர் மயக்கஞ் செய்தனர். இவர் கூற்றுப்படி கொண்டால் "எசை குடிமானத்தில்" என்பது வெற்றுரையாகுமன்றிப் பிறிதாகாது.

(5) "அரிந்து கொள்ள வேண்டிருக்கிறது" என்கின்றார். அறிந்து என்பதன் மூலமாகிய அறிவென்பதை அறியாமல் "அரிந்து" என வரைந்தனர். அரிந்து என்பது அரிவாளால் அறுத்து என்னும் பொருளே தரும். அறிவின் உண்மை நிலையை யினியேனும் அறிந்து கொள்வாராக. 'வேண்டிருக்கிறது' என்கின்றனர். இதுவும் விந்தையே,

(6) "பாணிக்கிரஹணம்" என்கின்றார். இதன் பொருள் தான் யாதோ?

(7) "கடாசியர்க" என்கின்றார். இதற்கு என்ன பொருள் கூறுவரோ?

(8) "காரணமல்லாது வேரில்லை" என்றனர். இவ்விடத்து வேரில்லை யென்பது பொருளற்று நிற்றல் காண்பாராக. "தவரி" என்கின்றார். தவரி என்பதும் பொருளற்ற மொழியேயாம்.

(9) "உருதி பத்தர மெழுதுகிற" என்றனர். இவ்வாறு ஒரு மொழியாகவேனும் இரு மொழியாகவேனும் யாண்டும் வழங்கக் கண்டிலம்.

(10) "திருவிளையாடலில் வள்ளியுங் கிணறு மிலிங்கமுமமைத்த படலத்தைப் பார்த்துக்கொள்ளலாம்" என்றனர். அப்புராணத்தில் இவர் கூறியபடி பெயருள்ள படலம் காணப்படவில்லை. இதுவரை இப்பெயரை யாவரும் கேட்டதுமில்லை, இவர்கண்ணுக்கு மட்டும் இவ்வளவு பெரியபடலம் வந்தது இவரது விதியேபோலும்.

(11) "வைசிய சமோகத்திற்கு" என்றனர். சமோகம் என்பதற்குப் பொருள் யாதோ? வடமொழி முறைப்படி கருதினால் மோ

கத்தோடு கூடியதென்று பொருளாகும். சற்குணசீலராகிய வைசியருக்கு துர்க்குணமாகிய மோகத்தைப் புணர்ப்பித்தனரே. இங்ஙனம் பல இடங்களில் கூறுகின்றனர். அந்தோ பரிதாபம்.

(12) "நம்மளான்றோர்கள்" என்கின்றார். இவ்வாறு "நம்மள்" என்று வழங்குவதை யாண்டுங் கண்டிலேம்.

(13) "நமது ஜாதிக்கி" என்கின்றார். நான்காம்வேற்றுமையுருபு (கு.) ஆகவும் அதனையறியாது மு. செட்டியார், கி. கொண்டது மிகவும் வியப்பே.

(14) "மைத்த சடங்குகள்" என்கின்றார். "மைத்த" சடங்குகள் என்றால் குற்றமுள்ள சடங்குகள் என்றுதானே பொருள் பெறும்? இவர் மேற்கொண்ட சடங்குகள் இங்ஙனமாதல் விதிப்பயனேபோலும்.

(15) "அன்னியில்" என்கின்றார். அன்னியில் என்றசொல்லை எந்தநூலில் என்னபொருளில் கண்டனரோ?

(16) "அளிவற்ற க்ஷேமத்தை" என்கின்றார். அளி-கிருபை வற்ற-வற்றிப்போக என்று பொருள்தரும். கிருபைவற்றிப்போனால் அழிவற்ற க்ஷேமம் எவ்வாறுண்டாகும். மேற்காட்டிய பிழைகளால் இந்த மு. செட்டியார் சொற்களின் பாகுபாடுகளாவது அவ்வவற்றின் பொருள் முடிபுகளாவது சிறிதுந் தெரியாதவரென்பது வெளியாம்.

(17) "அதின் விபரமாவன" எனத்தொடங்கி, "செய்து கொள்வதேயாம்" என முடித்துள்ளார். இங்ஙனம் பன்மை எழுவாயும் ஒருமைப்பயனிலையும் கொண்டுமுடிக்க எந்த இலக்கணத்தில் கற்றாரோ அறியேம்.

(18) "பிரதானமாய் எடுத்துக்கொள்ளாததினாலே" என்கின்றார். இந்த வாக்கியத்தில் ஆய் என்ற வினையெச்சத்துக்குக் கருத்தா எங்கே?

(19) "முதலியதுகள் செய்து" என்கிறார். முதலியது என்னும் ஒருமைச் சொல்லிற் கள் என்னும் பன்மை விகுதியைப்பொருத்தி வைத்தற்கு விதியுமில்லை. இங்ஙனம் செய்தல் கற்றவர் மதியுமில்லை. ஆகவே விதிகெட்டுத் தோன்று மிதன்பொருள், முதலியதுகள் எனப்பிளவுபடின் முதலானகுற்றமென்று தானேபோதரும். ஆகவே இவர் கூற்றுக் குற்றப்பொருள் தருவதை யுணர்வாராக. இம் மட்டோ "இதுகளை" எனவும் எழுதுகின்றார். இவரது இலக்கணவுணர்ச்சி வியக்கற் பாலதே.

(20) "செய்துவருகிற தோர் சடங்கா யிருக்கிறது" என்றார் இதில் இருக்கிறது என்ற பயனிலைக்கு எழுவாயில்லையே. எழுவாயின்மைபால் இவரெழுதிய வாக்கியம் வழுவாய் முடியுமாறு காண்பாராக.

(21) "நமக்கோவெனில் கடாசிபாக யேற்பட்டு ஆன்றோர்கள் நடத்திவந்து நாமும் நடத்திவருகிறோம்" என்றார். இதில் நடத்திவந்து என்ற வினையெச்சத்துக்கு முடிவிடமில்லையே. எடுதநுவினையைமுடிக்கும் கல்வித்திறமற்று வீண்வம்புபேசுதல் முறையன்மை யுணர்வாராக.

(22) "தாங்குகிறதும்... கட்டுகிறதும்... எழுதுகிறதும்... சாட்சிகளாகத் தோணுகிறதே தவிர வேறில்லை" என்கின்றார். இதில்சாட்சிகளாகத் தோணுகிறது எனப் பன்மையொருமைகளின் வித்தியாசமறியாது முடிவுசெய்தல் பரிகசிப்புக்கே இடமாகும்.

(23) "கீழ்மக்களுக்கு சாஸ்திரம் சடங்குக ளேற்படாததினால் அவரவர்கள் மனோபீஷ்டம்போல் தாலிகட்டி கூட்டிக்கொண்டு போகிறது" என்றார். இதில் போகிறது என்பது எழுவாயா? பயனிலையா? எழுவாயாயின் பயனிலையில்லை. பயனிலையாயின் எழுவாயில்லை. ஆகவே எழுவாய் பயனிலை வழுவாய்நிற்றல் சிறியாருமறிந்து சிரியாது போகாரென்க.

(24) "சடங்குகளேல்லாம் வழக்கம்போல் நடந்துவந்திருக்கிறது" என்றார். இதில் சடங்குகளெல்லாம் என்ற பன்மையெழுவாய்

நடந்துவந்திருக்கிறது என்ற ஒருமைப்பயனிலை கொண்டு பிழைபட்டதாயிற்று.

(25) "யிருப்பதை எல்லோருமறிந்த விஷயமே" என்றார். இதில் இருப்பதை என்ற இரண்டாம்வேற்றுமைச் சொன்முடிபுதெரியாது தடுமாறினமை வெளிப்படை.

(26 "க்ஷத்திரிய வர்க்கத்தில் மாலையிடுவதை முக்கியமாய்க் கூறியுள்ளன" என்றார். இதிலும் ஆய் என்ற வினைக்குக்கருத்தா இல்லை. கூறியுள்ளன என்ற பயனிலைக்கு எழுவாயில்லை.

இதுகாறுங் காட்டிய சொற்குற்றங்கள், பொருட் குற்றங்கள், இலக்கண முடிபுக்குற்றங்கள் ஆகிய எல்லாக்குற்றங்களும் மு. செட்டியாரவர்கள் இலக்கிய இலக்கணப் படிப்பு இல்லாதவரே என்பதுடன் சாதாரண பள்ளிச்சிறுர்களைப்போல வேனும் வாக்கிய மெழுதத்தெரியாதவ ரென்பதையும் நன்கு வெளிப்படுத்தின. இந்த மு. செட்டியார் தாமாக எழுதிய வசனப்பிழைக் குவியலைத்தள்ளி மேற் சென்றால் இவர் மேற் கோளாகக்காட்டிய கந்தபுராணம், பாரதம், நைடதம் திருவிளையாடல் என்ற நூல்களிலுள்ள சிலகவிகள் காணப்படுகின்றன. இவர் இலக்கிய இலக்கணபடிப்புச் சிறிது மில்லாது வெறுஞ்செட்டி தானிப்பவர்போல வெளிப்பட்ட விடத்து பிழைப்பட்டது சகசமே. அச்சிட்ட நூல்களிலுள்ள கவிகளை யெடுத்துக்காட்டும் போதாவது அக்கவிகளைக் கெடுக்காமல் இருந்தவாறு வெளிப்படுத்தலாகாதா? மகா பரிசுத்தமான அக்கவிகள் இந்த மு. செட்டியார் வாயில் நுழைந்ததும் பிழைநாற்றங்கொண்டு பொலிவிழந்தனவாயின், அந்தோபரிதாபம்.

அக்கவிகள் வருமாறு:— கந்தபுராணம்.

பூசை புரிந்து நாரிகரம் புனிதங் கரத்திற் கொடுத்தாணுக்
காசை பொருந்து மம்பிகையை யளித்தே னென்னவ றைந்திடலும்
மேசிலிமை யோர்புகழ்ந் தார்க ளிருவர் கீத மிசைந் தார்கண்
மாசில் கணங்கண முழவறைந்தார் மடவார் பல்லோர் வாழ்ந்தேத்தார்.

## பாரதம்.

காஞ்சாரற் கரியதனு வளைத்தா னென்று தரணிபரதம் முக்கண் கருகதனு விறைறும், பூஞ்சாரன் மணி நீலகிரிபோனின்ற பூசுரனை பிவனவனே போன்மென்றெண்ணிப், பாஞ்சாலர்பதிகன்னி யிருதன செங்கட் பங்கபத்தாற் பாங்காகபரிந்து நோக்கித். தேஞ்சார. நறுங் கழுநீர்ச் செய்யதாமஞ் செம் மணிக்கால் வருவியெனச் சேர்த்தினளே.

## நளன் விவாஹம்.

இன்னரிச் சிலம்பு செம்பொற் கிங்கிணி யார்ப்ப வேகி
மன்னவர் மனமுங் கண்ணும் வண்டெனத் தொடர்ந்து வீழக்
கொன்னுனை வயிர ஒள்வாளிடதர் கோன்குவவுத் தோண்மேற்
பொன்னரிமாலை சூட்டிப் பூங்கழல் வணங்கி நின்றாள்.

## திருவிளையாடல் உக்கிரபாண்டியன் விவாஹம்.

மங்கலநீ ரானம்பி மலரடி விளக்கி வாசக்
கொங்கலர் மாலைசூட்டி குளிர்மது பருக்கமூட்டி
நங்கைதன் கையைப்பற்றி நம்பிதன் கையிலேத்திப்
புங்கவ ரறியநன்னீர் மந்திரம் புகன்று பெய்தான்.

இங்ஙனம் மேற்கூறிய 4 பாடல்களில் பதினறு குற்றமுற வரைந்துள்ளார். குற்றங்களுள்ள இடங்களைக் குறிப்பிட்டுக் காட்டினோம். அவற்றினியல்பை விரிக்கிற் பெருகும்.

இம்மட்டோ. இறுதியாக ஒரு கவியை வரைந்துள்ளார். அக்கவி இன்ன நூலிலிருந்தெடுத் தெழுதியதென விளக்கிலர். அந்நூற் பெயரைக் கூறினால் உலகங்கொள்ளாது எள்ளித் தள்ளுமெனக் கருதினர்போலும். திருவிளையாடல் என்ற தலைப்பின் கீழ் அந்நூற் கவியினடியில் மெள்ள நுழைத்து இப்போலிக்கவியும் திருவிளையாடற் புராணத்துள்ளது போலுமென அறியார் மயங்கச் சாலஞ் செய்துள்ளார். இவர் சால வித்தை நன்று நன்று! இச்சாலக் கவியினும் நான்கு பெரும் பிழைகளுண்டு. அக்கவியையுங் காட்டித் தொலைப்பாம். அதுவருமாறு:—

நன்மையாங் குருவேசுகந் தருவது ஞானமே யென்று மல்வேதங் கன்மபாவ மிசுரங்களால் தேவர்கள் தருவிலங்குகள் மாந்தர் ஜென்மமாகுவர் ஜாதியாசாரமே செய்தவஞ் சுகமென்றுக் கன்ம காண்டத்தில் விதிப்பதேன விதிக்கின்ற காரண மூறையிரே என்பதாம். இதுகாறுங் கூறியவைநிற்க. கணடநூர் எனக் குறித்துள்ளார். தம்மூர்ப் பெயரையாவது பிழையின்றி யெழுதத் தெரிந்து கொள்ளாத இந்த மு. செட்டியாரா பத்திரிகைகளில் எழுதத்தக்கவர்? பன்னாளாகப் பன்முறை யெழுதிப்-பழகிய தம்மூர்ப் பெயரையும் பிழைபட வெழுதல் எவ்வளவு பரிகசிப்புக்கிடனாகும் என்பதையுணர்வாராக. அரங்கின்றி வட்டாடுவதுபோலச் சிற்றிலக்கிய இலக்கணங்களையேனும் முறையாகக் கற்குமுன்னர் அகங்கரித்து வாதவிபாசங்களை யெழுதப் புகுந்து பரிபவப்படாமல் அடக்கமுறுவாராயின் இகழ்ச்சியடையார். அன்றேற்படும் பாடு அவரேயறிக.

இங்ஙனம்.

பழ. க. ராம. இராமலிங்கச்செட்டி.

# நட்பு.

ஒருவர் மாட்டொருவர்க்கு உள்ள நெகிழ்ச்சியுள்ளதாதல் மக்களியல்பு. இந்நெகிழ்ச்சி பிறன்கீர்த்தி, கொடை, கல்வி, உருவம் இன்னோரன்னவைபற்றி எழுவதும், இவ்வாறின்றிப் பொதுவகையாற் கண்ட அளவின் எழுவது மென இருபாற்படும். அவற்றுண் முன்னையது பயன் கோடல் காரணமாகத் தற்பயப்பேறு காரியமாக எழுவது. பின்னையது அன்பே காரணமாக அவ்வன்பின் விளைவேகாரியமாக எழுவது. இக்கூறிய பின்னது முன்னது போலன்றிப் பண்பும் பயனும் அதுவேயாகலின் அவ்வுள்ள நெகிழ்ச்சி அன்பென்று உபசரித்துக் கூறப்படும்.

அன்புடையாரே நட்பின் கிழமைக்குரியவராவர். அஃதில்லார்ஒருவரோடொருவர் இகலிப்பகைமை மிகுதலேயன்றி மனவொருப்பாடிலராவரென்க. அன்புடையார்க்கே அதன் விளைவின் மேலெழுங்கீர்தலாகிய ஆர்வ முளதாகும். அவ்வார்வமுடைமையே நட்பிற்கு ஈன்றதாய். எந்தஞான்றும், அன்பிற்கும் நட்பிற்கும்வேறுபாடுள தென்பதைச் செவ்விதினறிவுறுத்தற் பொருட்டே தேவர் தனது தமிழ் வேதத்தின் கண் அன்புடைமையின் வேறதாய் நட்பெனப் படுமோர் அதிகாரம் அமைத்துள்ளார். அவ்வேறுபாடு யாதாமென ஆராயப்புகுவார்க்கு அன்பெனப்படும் உள்ள நெகிழ்சசி தம்மாட்டுத் தொடர்புடையார் கண்ணும், அருளென்னும் நிகழ்ச்சி தொடர்பில்லாதாரிடத்தும் நட்பெனப்படும் உள்ள நிகழ்ச்சி புணர்ச்சி, பழக்கம், உணர்ச்சியாயின ஒத்தவரிடத்தும் நிகழ்வதாமென வெள்ளிடை மலை போல் தெள்ளிதிற் புலப்படும். இதனை

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்"

என்ற பொய்யா மொழியே மெய்யாம் மொழியாக்கும்.

நட்புடையாரைக் காண்டலரிது. நட்பிற்கு உறைவிடமாக நந்தமிழகங்கொண்டது கோப்பெருஞ் சோழன் பிசிராந்தை யென்னுமிருவரையுமேயாம். கோப்பெருஞ்சோழன் அல்லற்படும்பொழுது பிசிராந்தை இலனுக, உளையோர் "பிசிராந்தை இனி வாரான்" என்றுரைப்ப

"தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினு
மல்லற் காலை நில்லன் மனனே."

எனக் கோப்பெருஞ் சோழன் கூறியமையானும், பின்னர் ஒரு காற் கோப்பெருஞ் சோழன் இறந்தமை தான் கேட்டளவிற் பிசிராந்தை உயிர் நீத்தமையானும் அவ்விருவர் நட்பும் நன்கு புலப்படும்.

நமது செந்தமிழ் நாடு முழுவதுஞ் சமணிருள் மூடிச் சைவங் காண்டற்கரிய காலை மங்கையர்க்கரசியாரும் மந்திரியாருமே சைவத்துறையினின்றனர். கோப்பெருந் தேவியாருங் குலச்சிறையாரும் தம்மில் ஒருவரைஒருவர் நன்குபார்த்து அறிந்திலராயினும்,உணர்ச்சியானாகிய நட்பிருந்தமையானன்றோ புகலியர்கோன் வரவினையேற்றுத் தமிழ்நாடு உய்தற்கண் ஒருப்பட்டனர். அன்றெனிற் சைவங்கண்டவர் யாவர்? தமிழ்நாடெங்கே? சைவர் யாவர்? இற்றைஞான்று யாமெல்லாம் விபூதிருத்திராக்ஷதாரணர்களாய்ச் சிவோபாசன விசிஷ்டாகளாய்ச் செம்மாந்து வீற்றிருக்கும் அரசியல் தான் ஏது? தென்னாடு தமிழ்நாடாய்ச் சைவவான்புலமாய் யாமெல்லாம் சைவ விளைவுண்டு தேக்கியுயிர் வாழ்ந்திருத்தல் அவ்விரு பெருஞ்செல்வரது நட்பினாலன்றோ? இதனை மறுப்பார் யாவர்?

மேலாளப்பட்டவை உணர்ச்சி ஒத்தலாகிய நட்பிற்குத் தக்க சான்றாம்.

இனி, நம்பியாரூர் பெருமானும், சேரர் பெருமானும் பிரியா நட்பினர். நம்பியாரூரர் இறைவர் திருவருளால் வெள்ளானை மீதேறி வெள்ளிமாமலை மேவுங்கால் சேரர் பெருமான் ஆண்டிலராக அவரைத் தம்மனத்தே கொண்டுசெல்ல அஃதுணர்ந்த சேரர் பெருமான் ஓர் பரிமீதேறித் தம் நண்பரோடும் இறைவர்பிரான் றிருவடி நிழல் பெற்றனர். இப்பேறு நட்பின் பயனென்றற்கண் ஐயமுளதேபோ?

பறம்பிற் கோமான் பாரியை முடியுடை வேந்தர் மூவரும் பொறாமை வயத்தரா யொருங்குகூடிக் கொல்ல, அவன்றன் காதன் மக்களைக் கபிலர்கையடை கொண்டு சென்று "இம்மக்களை மணங் கொள்க" வென்ன வேந்தரெவரையுமிரப்ப, ஒருவரும் இசைந்திலராக, ஓர் அந்தணரில்லின் வைத்து வடதிசைக் கேகியகாலை, அவ் விருமக்களும் வதுவை பெற்றமை அருந்தமிழ் ஔவையார்க்கும் பாரிக்கு முளதாய நட்பினாலன்றோ? இவை பழகுவதானுண்டாய நட்பிற்கு உவமானமாயமையும்.

பண்டு ஒருக்கால் சோழதேசத்துப் பெருந்திரு மாவளவனும், பாண்டிநாட்டுப் பெருவழுதியும் காவிரிப்பூம் பட்டினத்து ஒருங்கிருந்து இன்புற்றதே யுணர்ச்சியானும் நட்பிற்குத்தக்க சான்றாகும். (புணர்ச்சி, ஒருதேயத்தாராதல்.) இக்காலத்தும் பொருளீட்டுங்காரணங் கொண்டாவது வேறென் காரணங்கொண்டாவது அயல் தேயம்புகுந்த ஒருதேயத்தார் தம்மில் ஒருவரை யொருவர் அறிந்திலரேனும் ஒருதேயத்தவரென்னும் உரிமைகொண்டு தம்மைத்தாமே அறிவித்து நண்பு பூண்டொழுகுவது பிறத்தியட்சப் பிரமாணத்தால் யாவருமறிந்த தேயாம்.

இவற்றை யாராயப்புகு வார்க்கு நட்பென்னுமது நண்பு பூண்டோரளவினன்றி அவர்மக்கள் மேலும் உலகினர் மேலும் இயைபு பற்றியேனும் அன்றியேனும் பரந்து பட்டுவருதல் கண் கூடாம். இந்நட்பில்லா வாழ்க்கை நரகவாழ்க்கையா மாதலால் அது ஒழிந்த வாழ்க்கை அரிதென்பதாம்.

இங்ஙனம்

**திரு. சி. சுப்பையா,**

சிவாநுபூதிச் சித்தாந்த சங்கத்து அங்கத்தினர்,

தூத்துக்குடி.

# பேப்பர்மில் ஏல நோட்டீஸ்.

## லெக்ஷ்மி பேப்பர்மில்ஸ் கம்பெனி லிமிடெட் புனலூர்.

## ஹெட் ஆபீஸ் அரியக்குடி. நிர். 3. 08—09.

---

இக்கம்பெனியைச் சேர்ந்த புனலூரிலிருக்கிற பேப்பர்மில், கட்டிடங்கள், யந்திரங்கள், அணை, வாய்க்கால், 84 எக்கர் நிலம், ஆபீஸ் சாமான்கள், ஸ்டோர் சாமான்கள் முதலிய சகல சொத்துக்களையும் ஒரே மொத்தமாக ஏலத்தில் விடப்படும்.

1913ஹு செப்டம்பர்மீ 25 வ காலை 8-மணிக்கு தேவிகோட்டையில் எழுவங்கோட்டை ரஸ்தாவில் வெங்கடாசலஞ் செட்டியாரவர்கள் தண்ணீர்ப் பந்தலில் ஷை கம்பெனி டயரக்டர்களும் லிக்விட்டேட்டரும் இருந்து ஏலத்தில் விட்டு அதிகத் தொகைக்குக் கேட்பவர்கட்கு ஜாரிசெய்து விடுவார்கள்.

ஏலத்தில் எடுப்பவர்கள் தாம் கேட்கும் தொகையில் 4-ல் ஒரு பாகம் உடனே லிக்விடேட்டரிடம் கட்டிவிடவேண்டும். அப்பால் 15 நாளைக்குள் பாக்கித்தொகைபூராவும் கட்டிவிட்டு விலைத்தஸ்தவேசு பெற்றுக்கொள்ளவேண்டும். அப்படிக் கட்டத்தவறினால் அட்வான்ஸ் கட்டிய தொகையை இழந்துவிடுவதுடன் மறு ஏலம் விடுவதினால் ஏற்படும் செலவும் நஷ்டமும் ஷையாரே கொடுக்கக் கட்டுப்பட்டவராவார். இந்த நிபந்தனைகட்கு உட்பட்டவர்கள் தான் ஏலம் கேட்கப் பாத்தியதை யுடையவராவார்கள்.

இப்படிக்கு

வே. நா. கதிரேசன் செட்டி,

லிக்விட்டேட்டர்,

லெக்ஷ்மிபேப்பர்மில்ஸ் கம்பெனி லிமிடெட்

கும்பகோணம்.

**குறிப்பு:—ஷை சொத்தின் விவரம் தெரியவேண்டியவர்கள் புனலூருக்கு நேரில் போய்ப் பார்த்துக் கொள்ளவும். மற்ற விவரம் தெரிய வேண்டியவர்கள், வே. நா கதிரேசன் செட்டியார், கும்பகோணம் என்ற விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.**

# நாச்சியார்புரம் செந்தமிழ் வாசகசாலையின் முதல் வருஷ பூர்த்திக்கொண்டாட்டம்.

1—9—13ல் மாலை 3 மணிக்கு நாச்சியார்புரம் செந்தமிழ் வாசக சாலையின் முதல் வருஷ பூர்த்திக் கொண்டாட்டத்திற்கு அவண் சிவன் கோவில் முன் கொட்டகையில் ஒரு பெருஞ் சபை கூடியது. ஆண்மக்களும் பெண்மக்களுமாக சுமார் 400 பேர் கூடினார்கள். முதலில் திருநெல்வேலி ஸ்ரீமத் சீதாராமபாகவதரவர்கள் கடவுள் வாழ்த்தாக அருட்பாக்களை இன்னிசையுடன் பாடினார்கள். முன்னமே நிச்சயித்திருந்தபடி மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் இச்சபையின் அக்கிராசனாதிபதியாக இருக்கவேண்டுமென்று மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் பிரேரணை செய்ய சபையார் அங்கீகரித்தவாறு ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அக்கிராசனம் வகித்து முன்னுரையாகச் சில விஷயங்களைக்கூறியமர்ந்தார்கள். சபையின் முதல்வருஷ அறிக்கைப்பத்திரம் வாசிக்கப் பெற்றது. அறிக்கையைப் பற்றிய நல்லபிப்பிராயத்தை தூத்துக்குடியிலிருந்து வந்திருந்த திருவாவடுதுறை ஆதீனச் சைவப்பிரசாரகர் ஸ்ரீமத் பொ. முத்தயபிள்ளையவர்களும், ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியாரவர்களும், அக்கிராசனாதிபதியவர்களும் வியந்து கூறினார்கள்.

பின்னர் ஸ்ரீ பொ. முத்தயபிள்ளையவர்கள் "சைவசித்தாந்தம்" என்ற விஷயத்தையும், குன்றக்குடி ஸ்ரீமத் இராமச்சந்திர சாஸ்திரியவர்கள் 'குரு பக்தி' என்ற விஷயத்தையும், நான் முறைப்படி பலவாறு விரித்து நன்றாகப் பேசினார்கள். அதன் பின் மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் 'உள்ளத்தியல்' என்ற விஷயத்தைப் பற்றித் தாம் இயற்றிய அடியில் காட்டப் பெற்ற 3 வெண்பாக்களைக் கூறி அவற்றின் பொருளை மிக அழகாக எடுத்துரைத்தார்கள். அவ்வெண்பாக்களிவை,

எல்லா முணர்ந்தேன்யா னென்றுலகை வஞ்சிக்க
நல்லாரி ளுணி நடுக்குறுமாற்—கல்லாக்
கடையனெனச் சாலக் கவலுறுமா லெவ்வா
றுடையவனே யுய்த லுளம்.

இவ்வுலக வின்பமெனி லெற்கென் றெழுதருமற்
றெவ்வயினின் பாதநிழ லின்பெனிலோ—செவ்வே
யயிரா துலக மடைகவென மென்னை
யுயிரார் முதல்வ வுளம்.

எவ்வினைக்கு மீசன் பயன்றருவா னென்றுமறை
செவ்வ னுரைக்குந் திறமுணர்ந்தும்—உய்வினைக்கட்
சற்றே புரியச் சலிப்புறுமா லென்னுடையாய்
எற்றேயென் னுள்ளத் தியல்.

---

அக்கிராசனாதிபதியவர்கள் ஒவ்வொரு உபந்யாச முடிவிலும் அதனதன் நயங்களை எடுத்து விளக்கிப் பொருத்தமாகப் பேசி இறுதியில் சபையால் ஆகும் பயன்களைப் பற்றி யெடுத்துரைத்தார்கள். அப்பால் நாச்சியார்புரத்தில் வசிப்பவர்களும், தனவைசிய குலதிலகருமாகிய ஸ்ரீமத் கூத்தலூர் ராமையா அவர்களியற்றிய வாழ்த்துப் பாக்களையும், மதுரை ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையரவர்களியற்றிய வாழ்த்துப் பாக்களையும் நெடுவை வித்துவான் ஸ்ரீ திரு. இராமசுவாமியையங்காரவர்கள் இன்னிசையுடன் பாடினார்கள். அவை வருமாறு:

## ஸ்ரீமத். கூத்தலூர். இராமையா அவர்களியற்றியவை.

பைந்தமிழ்க்குத் தலைவரென வெப்புலவர் வரினுமொவ்வோர் பனுவல்பெற்றுச்
சிந்தைநினை வின்படியே செய்நூலை முடிப்பதுவே சிறப்பாக் கொண்ட
தந்திமுகத் தனிக்கடவுள் நாச்சிமா நகர்சிறக்கத் தாபித் தோங்குஞ்
செந்தமிழ்வா சகசாலை தினம்வாழத் திருவருளைச் செய்க மன்னோ. (௧)

பூவிரியு நெடும்பொழிலும் புனல்விரியு மணித்தடமும் பொன்னி நாட்டுக்
காவிரிநேர் தருநதியுங் கதிர்விரிபைங் கழனிகளுங் கனலிக் கற்றோர்
நாவிரியும் புகழ்படைத்த நாச்சியார் புரத்தினிலை நாட்டுந் தெய்வப்
பாவிரியுஞ் செந்தமிழ்வா சகசாலை நிலவுலகிற் பரவ மாதோ. (௨)

சரசங்கப் படையானுங் கமலமல ருடையானுங் கருதற் கெட்டா
வரசங்கத் தலைமைபெறு மதுரைநகர்ச் சொக்கேசர் மலர்த்தாள் போற்றிப்
பரசங்க நல்வினையாற் படைத்தகதி ரேசனெனப் பகர்கா ரிங்஡ன்
பிரசங்கம் பொழிந்ததெனப் பிரசங்க மழைமாரி பெய்த தன்றே. (௩)

கண்டனைய மொழிக்கௌரி பங்காளர்க் கன்புடைய கந்தசாமித்
தண்டமிழ்வா ணன்புலமை தனையுணர்ந்து சேடன்வெள்கித் தலைகள்சாய்த்துக்
கொண்டதின்மண் சுமந்தலுத்தான் குருமுனியுங் குறுமுனியாய்க்குலவுந்தேவர்
அண்டமிர் தடவரைபுக் கடங்கினனென் றெவர்மற் றவற்கொப்பாரே (ச)

புந்திமகிழ் வுடனினிதா நகரத்தார் நாச்சியார் புரத்து நாட்டுஞ்
செந்தமிழ்வா சகசாலை முதல்வருடக் கொண்டாட்டச் சிறப்பை நோக்கி
இந்திரன்கண் ணாயிரமுன் செய்தவத்தாற் பெற்றனனென் றின்பத்தாழ்ந்தான்
அந்தமில்கட் செவிபடைத்தேன் காணவுங்கேட் கவுமென்று னாகந்தன்றானே (ரு)

---

மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கம் அக்கிராசனாதிபதி

## மகா-ா-ா-ஸ்ரீ எம். கோபாலகிருஷ்ணையரவர்களியற்றிய வாழ்த்துப்பாக்கள்.

---

வாச்சியப்பன் மொழிகளினுன் மணந்தினிக்குந் தாய்மொழியை
வளர்த்தலேதான்
நேர்ச்சி யப்பைந் தமிழைநமக் குரியநகர் வளர்ப்பம் என
நேர்ந்து செல்வ
நாச்சியப்பன் செந்தமிழ்வா சகசாலை நாட்டினனால்
நன்கன் றோன்றன்
ஆச்சியப்பன் அறிவுளஇம் மகற்பெறுதற் கென்னதவம்
ஆற்றி னாரோ? (க)

நேர்த்தியுறக் கந்தசா மிக்கவிஞன் றலைமையின்கீழ்
நிகழ் இவ் வாண்டு
பூர்த்திமகா உத்ஸவத்திற் காக இவண் கூடியுள
புலமை சான்றீர்
மூர்த்திசிறி தேயெனினுங் கீர்த்திபெரி தென்னுமுது
மொழிக் கிலக்காச்
சீர்த்திபெறு நாச்சியப்பன் சுகமெய்தச் சிவபரனைச்
சிந்திப் பீரே. (உ)

பின்னர், அக்கிராசனாதிபதியவர்கள் இவ்வாழ்த்துப்பாக்களின் சொற்சுவை பொருட்சுவைகளை யெடுத்து விளக்கி முடிவுரை கூறினார்கள். கடவுள் வாழ்த்துக்கூறப் பெற்றது. யாவர்க்குஞ் சந்தன

தாம்பூலாதி வழங்கப் பெற்றன. அக்கிராசனாதிபதியவர்கட்கும் வித்துவான்கட்கும் சபையோர்க்கும் வந்தனங் கூறப்பெற்றது. முதல் நாள் கூட்டம் இம்மட்டில் இரவு 9 மணிக்கு நிறைவேறியது.

2—9—13 ஆகிய மறுதினம் மாலை 3 மணிக்கு முதல் நாள் போலவே மறுபடியும் சபை கூடியது. கடவுள் வாழ்த்துப் பாடப் பட்டது. சபையார் விருப்பப்படி மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகித்து முன்னுரையாகச் சில கூறியமர்ந்தார்கள். ஸ்ரீ நாசசியப்பசெட்டியாரவர்கள் 1. கோனாபட்டு கற்பகவிநாயக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகாசிரியர் ஸ்ரீமத் அ. கோபாலய்யரவர்கள் 2. சொக்கலிங்கம்புதூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தமிழ்ப் போதகாசிரியர் ஸ்ரீமத் ரெ. இராமமூர்த்தியப்பரவர்கள் 3. நெடுவை வித்துவான் ஸ்ரீமத் திரு. இராமசுவாமியப்பங்காரவர்கள் 4. மதுரை ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் 5. ஸ்ரீ நாச்சியப்பசெட்டியாரவர்கள் 6. இவர்கள் முறையே அறம், சகோதர வாஸ்ஸல்யம், தெய்வ சிந்தனை, பரோபகாரம், தேனுந் தேனீயும், கற்பு என்னும் விஷயங்களைப் பற்றித் தத்தம் மதி நுட்பந் தோன்றத் தெளிந்தஆராய்ச்சி காட்டி இனிது உபந்யசித்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் ஒவ்வொரு விஷயங்களைப் பற்றியும் உபந்யாசகர்கள் திறமையைப் பாராட்டியும் பேசி முடிவுரை கூறினார்கள். கடவுள் வாழ்த்துப் பாடியதுடன் சபையார் யாவர்க்குஞ் சந்தனதாம்பூலாதி வழங்கியுபசரித்தனர். அக்கிராசனாதிபதியவர்கட்கும் வித்துவான்கட்கும் சபையோர்க்கும் வந்தனங் கூறப்பெற்றது. இவ்வளவில் சபை நிறைவேறியது.

நாச்சியார்புரம் நகரத்தார்கள் எல்லாரும் இச்சபைவிஷயத்தில் மிகுந்த அன்புடன் இருக்கிறார்களென்பதும், இச்சபையின் நிரந்தர அக்கிராசனாதிபதியவர்கள் ஸ்ரீ சு. ப. ராம. நாச்சியப்பசெட்டியாரவர்கள் மிகுந்த ஊக்கத்துடன் பாராட்டுகின்றார்களென்பதும், யாவரும் மெச்சததக்கனவேயாம். இவர்கள் நீடுவாழ்க. செந்தமிழ் வாசகசாலை சிறப்புற்றோங்குக. திருவாலவாயன் திருவருள் பெருகுக.

சுபம். சுபம்.

இங்ஙனம்

**இராமச்சந்திரராவ்.**